இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 322 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆனி 18 – செவ்வாய்க்கிழமை 02 ஜுலை 2024 – கோவை ★★12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 322 : Thiruvalluvar Year - 2055 - Aani 18 - Tuesday 02 July 2024 - Kovai ★★ 12 Pages ₹ 5.00


### முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் கனவுத் திட்டமான ‘நான் முதல்வன்’ திட்டத்தில் -

# 1000 மாணவர்களுக்கு பயிற்சி அளிக்க நடவடிக்கை!

## பயிற்சி நிறுவனங்கள் ஜுலை 12ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம்! தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

**சென்னை, ஜுலை 2 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கனவுத் திட்டமான ‘நான் முதல்வன்’ திட்டத்தின் கீழ் 1000 மாணவர்களுக்கு பயிற்சி அளிக்க, பயிற்சி வழங்கும் நிறுவனங்களை தமிழ்நாடு அரசு தேர்வு செய்ய நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.**

‘நான் முதல்வன்’ திட்டத்தில் போட்டித் தேர்வுகளுக்கான தனி பிரிவை இளைஞர் நலத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கடந்த மார்ச் 7ஆம் தேதி தொடங்கி வைத்தார். ஒன்றிய அரசின் வேலைவாய்ப்புக்கான போட்டித் தேர்வுகளை தமிழக இளைஞர்கள் எளிதாக அணுகும் வகையில் பல பயிற்சி திட்டங்களை இந்தப் பிரிவு செயல்படுத்தி வருகிறது.



இந்நிலையில், ‘மத்திய பணியாளர் தேர்வாணையம், ரயில்வே, வங்கிப் பணி ஆகிய தேர்வுகளில் தமிழக இளைஞர்கள் அதிகம் வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கில், தேர்ந்தெடுக்கப்பட்ட 1,000 மாணவர்களுக்கு உண்டு, உறைவிட வசதியுடன் 6 மாத பயிற்சி வழங்கப்படும்’ என்று 2024-2025ம் ஆண்டுக்கான தமிழக நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.

அதன்படி, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின்கீழ் இயங்கிவரும் ‘நான் முதல்வன்’ போட்டித் தேர்வுகள் பிரிவின் மூலம் கட்டணமில்லா உறைவிட பயிற்சி தொடங்கப்பட உள்ளது.

இதில் பயன்பெற விரும்பும் மாணவர்கள் வங்கிப் பணி தேர்வு அல்லது மத்திய பணியாளர் தேர்வாணையம் மற்றும் ரயில்வே தேர்வு, இவற்றில் ஏதேனும் ஒன்றுக்கு மட்டுமே பயிற்சி பெற முடியும். இதற்கு 1,000 பயனாளர்களை தேர்ந்தெடுக்க நுழைவுத் தேர்வுகள் நடத்தப்படவிருக்கின்றன.

இதில் ஆர்வமுள்ள மாணவர்கள் கடந்த மாதம் ஜுன் 8ஆம் தேதி முதல் 23ஆம் தேதி வரை விண்ணப்பித்தனர். தேர்வுக்கான நுழைவுச் சீட்டு ஜுலை 9ஆம் தேதி அன்று வெளியிடப்படவிருக்கிறது. இதற்கான தேர்வு ஜுலை 14ஆம் தேதி அன்று காலை 10 மணி முதல் 11 மணி வரை நடைபெறுகின்றன.

இந்த நிலையில் இத்திட்டத்தின் கீழ் பயிற்சி நிறுவனங்களை தேர்வு செய்ய தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் டெண்டர் கோரியுள்ளது.

டெண்டரில் பங்கேற்க விரும்பும் பயிற்சி நிறுவனங்கள், ஜுலை 12ஆம் தேதி மாலை 3 மணிக்குள் இணைய தளம் மூலமாக டெண்டர் ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மண்டலத்தில் ஒன்றிய பணியாளர் தேர்வாணையம், ரயில்வே போட்டி தேர்வுக்காக 300 பேருக்கும், மதுரை மற்றும் கோவை மையத்தில் வங்கிப் பணி தேர்விற்காக தலா 350 பேருக்கும் உண்டு, உறைவிட வசதியுடன் 6 மாத பயிற்சி வழங்கப்படவுள்ளது. பயிற்சி வழங்கும் நிறுவனங்களை தேர்வு செய்ய இப்போது டெண்டர் கோரப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

---

# அ.தி.மு.க. ஆட்சியில் வீடு கட்டும் திட்டத்தில் ஊழல்!

## 24 பேர் மீது வழக்குப் பதிவு!

திருவண்ணாமலை, ஜுலை 2 -

திருவண்ணாமலை மாவட்டத்தில் கடந்த 2017-18ஆம் நிதி ஆண்டில் பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா திட்டத்தின் கீழ், வீடு கட்டும் திட்டத்தில் பயனாளிகளை தேர்வு செய்ததில் முறைகேடு நடந்திருப்பதாக பி.டி.ஓ.க்கள் உள்பட 24 அதிகாரிகள் மீது லஞ்ச ஒழிப்பு துறையினர் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு, அரசு மானியத்தில் வீடு கட்டும் திட்டம் பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா எனும் பெயரில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில், பயனாளிகளை தேர்வு செய்து, வீடு கட்டி முடிக்கும் வரையிலான பணிகளை கண்காணித்து நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு ஊரக வளர்ச்சித்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், திருவண்ணாமலை மாவட்டத்தில், வந்தவாசி, தெள்ளார், ஆரணி, ஜவ்வாதுமலை ஒன்றியங்களில் பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா திட்டத்தின் கீழ், கடந்த 2017-2018ம் நிதி ஆண்டில் பயனாளிகளை தேர்வு செய்ததில் மிகப்பெரிய அளவில் மோசடிகள் நடந்திருப்பதாக, அப்போதைய ஆரணி தொகுதி எம்.பி. விஷ்ணுபிரசாத் குற்றம் சாட்டியிருந்தார்.

அதன்படி திருவண்ணாமலை மாவட்ட லஞ்ச ஒழிப்பு பிரிவு போலீசுக்கு லோக் ஆயுக்தா பரிந்துரை செய்தது. அதன்பேரில், லஞ்ச ஒழிப்பு பிரிவு டி.எஸ்.பி. வேல்முருகன், புகார் மனு மீது விசாரணை நடத்தி, நேற்று வழக்குப் பதிவு செய்திருக்கிறார்.

---

### ஒன்றிய பா.ஜ.க. அரசு - பிரதமர் மோடியால் திறந்து வைக்கப்பட்ட

# அயோத்தி ராமர் கோவிலுக்குள் மழைவெள்ளம்!

## புதுடெல்லி விமான நிலைய மேற்கூரை சேதம்!

புதுடெல்லி, ஜுலை 2 -

ஒன்றிய பா.ஜ.க. அரசு - பிரதமர் மோடியால் திறந்து வைக்கப்பட்ட அயோத்தி ராமர் கோவிலுக்குள்ளும், நடைபாதையும் மழைநீர் புகுந்து சேதமடைந்தன.

மேலும் புதுடெல்லி விமான நிலையக் கூரையும் மழை நீரால் இடிந்து விழுந்தது.

அயோத்தியில் பிரமாண்ட முறையில் ராமர் கோயில் கட்டப்பட்டது. இதனை பிரதமர் மோடி திறந்து வைத்தார்.

இந்நிலையில் சமீபத்தில் கனமழை பெய்தது. இதில் கோவிலின் மேற்கூரையில் பல இடங்களில் நீர் கசிவு ஏற்பட்டது.

கோவிலுக்குள் தொடர்ந்து நீர் வடிந்து கொண்டிருந்ததால் பக்தர்கள் பெரும் அவதிக்குள்ளானதாக கோவிலின் தலைமை அர்ச்சகர் கூறியிருந்தார்.

இந்த நிலையில் கோவிலுக்கு செல்லும் சாலையிலும் மழையால் பெருத்த சேதம் ஏற்பட்டிருப்பது தெரியவந்துள்ளது.

கோடிக்கணக்கில் செலவழித்து போடப்பட்ட 14 கி.மீ. நீளம் கொண்ட இந்த ராமபாதை பல இடங்களில் சேதமடைந்து இருக்கிறது.

குறிப்பாக 10க்கும் மேற்பட்ட இடங்களில் திடீர் பள்ளங்கள் ஏற்பட்டு உள்ளன. மேலும் ராமபாதை நெடுகிலும் உள்ள தெருக்கள், பாதைகளும் நீரில் மூழ்கி உள்ளன. அங்குள்ள வீடு, ஆஸ்பத்திரி போன்ற கட்டிடங்களும் தண்ணீரில் மூழ்கி உள்ளன.

**டெல்லியில் கனமழை!**

டெல்லியின் பல்வேறு பகுதிகளில் நேற்று முன்தினம் காலை முதலே கன மழை பெய்து வருகிறது. இந்த கனமழை காரணமாக டெல்லியின் பல்வேறு பகுதிகளில் தண்ணீர் சூழ்ந்துள்ளது.

இந்நிலையில் டெல்லி விமான நிலையத்தின் முதலாவது டெர்மினலின் மேற்கூரை 29.06.2024 அன்று அதிகாலை 5.30 அளவில் இடிந்து விழுந்தது. தகவல் அறிந்ததும் தீயணைப்பு துறையினரும், போலீஸாரும் சம்பவ இடத்துக்கு விரைந்தனர்.

வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்த பகுதியில் மேற்கூரை இடிந்து விழுந்ததால் அங்கிருந்த கார்கள் நசுங்கி சேதமாயின. இதில் காருக்குள் சிக்கியிருந்தவர்களை தீயணைப்புப் படையினர் மீட்டனர்.

மேற்கூரை இடிந்து விழுந்த சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தார். மேலும், படுகாயமடைந்த 6 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். டெல்லி விமானநிலைய டெர்மினல் ஒன்றில் விமான சேவைகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுவதாக விமான நிலைய நிர்வாகம் அறிவித்துள்ளது.

---

### ‘நீட்’ தேர்வு முறைகேடு:

# மாநிலங்களுக்கிடையே பெரும் மோசடி கும்பல் செயல்படுகிறது!

## கோத்ரா நீதிமன்றத்தில் சி.பி.ஐ. தகவல்!

கோத்ரா, ஜுலை 2 -

நீட் தேர்வு முறைகேடு தொடர்பாக குஜராத்தில் கைதான பள்ளி நிர்வாகி உள்ளிட்ட ஐந்து பேரை காவலில் எடுத்து சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

நீட் மோசடியில் மாநிலங்களுக்கு இடையே செயல்படும் பெரும் கும்பல் உள்ளதாக நீதிமன்றத்தில் சி.பி.ஐ. தெரிவித்துள்ளது.

நீட் கேள்வித்தாள் கசிவு மோசடியில் பீகார், ஜார்கண்ட் மாநிலத்தில் கைதானவர்களிடம் பெற்ற வாக்குமூலத்தின் அடிப்படையில் குஜராத் மாநிலத்தில் ஏழு இடங்களில் சி.பி.ஐ. சோதனை நடத்தியுள்ளது.

கோத்ராவில் உள்ள தேர்வு மையத்தின் பள்ளி நிர்வாகி உட்பட ஐந்து பேரை சி.பி.ஐ. காவலில் எடுத்துள்ளது. இவர்களுக்கு வெளி மாநில நீட் மோசடி கும்பல்களுடன் முக்கிய தொடர்பு உள்ளதாக, கோத்ரா முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் சி.பி.ஐ. தெரிவித்துள்ளது.

வெளி மாநில கும்பல்களுடன் இணைந்து கோத்ராவில் உள்ள இரண்டு பள்ளிகளை தேர்வு மையமாக மாணவர்களை தேர்வு செய்ய வைத்துள்ளதாகவும், இதற்காக உள்ளூர் முகவரிகளும் போலியாக கொடுக்கப்பட்டுள்ளன.

பீகார், ஒடிசா, மகாராஷ்டிரா, ராஜஸ்தான், உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த 27 மாணவர்கள் கோத்ராவை தேர்வு மையமாக தேர்வு செய்துள்ளதாகவும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்த மாணவர்களிடமிருந்து தலா 10 லட்ச ரூபாய் வரை மோசடி கும்பல் பெற்றுள்ளது. ஜார்கண்ட் மாநிலத்துக்கு அனுப்பப்பட்ட கேள்வித்தாள் பீகார் மாநிலத்தில் கசிந்தது போன்று குஜராத் மோசடி கும்பலுக்கும் கிடைத்ததா என்ற கோணத்தில் தீவிர விசாரணை நடைபெற்று வருகிறது.

---

### டி 20 கிரிக்கெட்: தோல்வியே காணாமல் உலகக் கோப்பைத் தொடரை வென்ற

# இந்திய அணிக்குப் பாராட்டுகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஜுலை 2 -

டி20 கிரிக்கெட் போட்டிக்கான உலகக் கோப்பைத் தொடரில் தோல்வியே காணாமல் வெற்றி பெற்ற இந்திய அணிக்குப் பாராட்டுகள் என்று குறிப்பிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாவது முறையாக டி20 உலகக் கோப்பையை வென்ற இந்திய அணிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பாராட்டு தெரிவித்து வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-



**முழுமையான ஆதிக்கத்துடன், நம் இந்திய அணி வீரர்கள் இரண்டாவது முறையாக டி20 உலகக் கோப்பையை வென்றுள்ளதைக் கொண்டாடுவதில் உற்சாகமடைகிறேன்.**

**சவாலான சூழல்களிலும் இணையற்ற அறிவுக் கூர்மையை வெளிப்படுத்திய நமது இந்திய அணி, தோல்வியே காணாமல் உலகக்கோப்பைத் தொடரை நிறைவு செய்துள்ளது.**

**இந்திய அணிக்குப் பாராட்டுகள்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.